# TAKLIMAT DSKP KSSR BAHASA TAMIL SJKT TAHUN 5 KEPADA JURULATIH UTAMA (JU)

"Peneraju Pendidikan Negara"

முதன்மைப் பயிற்றுநருக்கான
தமிழ்மொழித் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தின் விளக்கம்
ஆண்டு 5
(தமிழ்ப்பள்ளி)

## செய்யுளும் மொழியணியும்

Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# செய்யுளும் மொழியணியும்

## கல்வி

மாந்தர் அறிவு வளர்ச்சிக்கான திறவுகோல்

## இலக்கியம்

நல்வாழ்வுக்கு வழிகாட்டும் வெளிச்சம்

# செய்யுளும் மொழியணியும்

## நோக்கம்

- மொழியின் இனிமையைச் சுவைத்தல்
- மனமகிழ்வை ஏற்படுத்துதல்
- மொழியறிவை மேம்படுத்துதல்
- படைப்பாற்றலை வளர்த்தல்
- மனிதப் பண்புகளை விதைத்தல்
- நல்வாழ்வுக்கு வழிகாட்டுதல்

# புதிய கலைத்திட்டத்தில்

## செய்யுளும் மொழியணியும் (LANGUAGE ARTS)

- இசை கூட்டிப் பாடுதல்
- நாடகம் நடித்தல்
- கதை கூறுதல்
- வசனம் பேசுதல்
- வண்ணம் தீட்டுதல்

# மனமகிழ்வு கற்றல்கற்பித்தலின் அவசியம்

- இனிமையான வகுப்பறைச் சூழல் அமையும்
- பல்வகை நுண்ணறிவாற்றலை அடையாளங்காணலாம்
- மகிழ்ச்சிகரமான கற்றல்கற்பித்தல் நடைபெறும்
- கற்றலில் மாணவர்களின் ஆர்வம் மேலிடும்
- மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்
- கற்றது மனத்தில் நன்கு பதியும்
- அன்றாட வாழ்வில் பயன்படுத்த வழிவகுக்கும்

# ஆண்டு ஐந்து இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:-

- செய்யுள் மொழியணிகளின் பொருளறிதல்
- அவற்றைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துதல்

# ஆண்டு ஐந்துக்கான செய்யுள்கள்

- உலகநீதி
- வெற்றி வேற்கை
- திருக்குறள்
- மூதுரை
- பல்வகைச் செய்யுள்

# உலகநீதி

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி யல்லலையுந் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேறல் வேண்டாம்.

# வெற்றி வேற்கை

1. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
2. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
3. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

# திருக்குறள்

1. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
   என்புதோல் போர்த்த உடம்பு.(80)
2. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
   நோக்கக் குழையும் விருந்து.(90)
3. தீயவை தீய பயத்தலால் தீயவை
   தீயினும் அஞ்சப் படும்.(202)
4. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல்.(291)

# திருக்குறள்

5. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.(398)

6. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.(400)

7. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.(423)

8. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.(102)

# மூதுரை/வாக்குண்டாம்

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.



Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# பல்வகைச் செய்யுள்

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனது என்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

# பல்வகைச் செய்யுள்

## நீதிநெறி விளக்கம்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

# செய்யுள்களுக்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**4.4 உலகநீதியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.**

4.4.3 ஐந்தாம் ஆண்டுக்கான உலகநீதியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**4.5 வெற்றி வேற்கையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.**

4.5.2 ஐந்தாம் ஆண்டுக்கான வெற்றி வேற்கையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

# செய்யுள்களுக்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**4.6 திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.**

4.6.5 ஐந்தாம் ஆண்டுக்கான திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**4.7 மூதுரையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.**

4.7.2 ஐந்தாம் ஆண்டுக்கான மூதுரையின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

# செய்யுள்களுக்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**4.8 பல்வகைச் செய்யுள்களின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.**

4.8.3 ஐந்தாம் ஆண்டுக்கான பல்வகைச் செய்யுளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர்.

# ஆண்டு ஐந்துக்கான மொழியணிகள்

- இணைமொழிகள்
- உவமைத்தொடர்கள்
- இரட்டைக்கிளவிகள்
- மரபுத்தொடர்கள்
- பழமொழிகள்

# ஆண்டு ஐந்துக்கான மொழியணிகள்

## இணைமொழி

- பேரும் புகழும்
- ஒளிவு மறைவு
- அரை குறை
- கல்வி கேள்வி

## உவமைத்தொடர்

- அனலில் இட்ட மெழுகு போல
- இலைமறை காய் போல
- குன்றின் மேலிட்ட விளக்குப் போல


Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# ஆண்டு ஐந்துக்கான மொழியணிகள்

## இரட்டைக்கிளவி

- தடதட
- மடமட
- பளீர்பளீர்

## மரபுத்தொடர்

- கரைத்துக் குடித்தல்
- காது குத்துதல்
- கிள்ளுக் கீரை
- கை கூடுதல்
- திட்ட வட்டம்
- கை கொடுத்தல்
- கையும் களவுமாய்
- பெயர் பொறித்தல்
- தட்டிக் கழித்தல்
- ஈவிரக்கம்

# ஆண்டு ஐந்துக்கான மொழியணிகள்

## பழமொழி

- புத்திமான் பலவான்.
- மனம் உண்டானால் மார்க்கம் உண்டு.
- வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
- வெள்ளம் வருமுன் அணை போடு.
- ஆழம் அறியாமல் காலை விடாதே.
- ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால்.
- தீட்டின மரத்திலே கூர் பார்ப்பதா?
- நிறைகுடம் தளும்பாது.
- வருந்தினால் வாராதது இல்லை.
- நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

# மொழியணிகளுக்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**4.9 இணைமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

4.9.5 ஐந்தாம் ஆண்டுக்கான இணைமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**4.10 உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

4.10.3 ஐந்தாம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# மொழியணிகளுக்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**4.11 இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.**

4.11.5 ஐந்தாம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.

**4.12 மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

4.12.5 ஐந்தாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களின் **பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

# மொழியணிகளுக்கான உள்ளடக்கத்தரங்களும் கற்றல் தரங்களும்

**4.13 பழமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.**

4.13.5 ஐந்தாம் ஆண்டுக்கான பழமொழிகளின் பொருளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

# மாதிரி அணுகுமுறைகள்

## அ) பொருளை அறிவர்

- கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பிக்கலாம்.
- கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் செய்யுள் மொழியணிகளின் பொருளை மாணவர்க்கு நன்கு விளக்கக் கூடியனவாக இருத்தல் வேண்டும்.
- கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு பரிந்துரைத்திருக்கும் பொருளையே மாணவர்க்குக் கற்பிக்க வேண்டும்.

# மாதிரி அணுகுமுறைகள்

## அ) பொருளை அறிவர்

- நடவடிக்கைகளும் எடுத்துக்காட்டுகளும் மாணவர்களின் அன்றாட வாழ்வோடு தொடர்புடையனவாக இருக்க வேண்டும்.
- Language Arts தொடர்பான நடவடிக்கைகள் (கதை கூறுதல், கலந்துரையாடுதல், பாகமேற்று நடித்தல் போன்றவை) கற்றல்கற்பித்தலில் கண்டிப்பாக இடம்பெற்றிருக்க வேண்டும்.

# மாதிரி அணுகுமுறைகள்

## ஆ) பொருளை அறிந்து கூறுவர்.

- கற்ற செய்யுளின் பொருளை மாணவர்கள் கூறும் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

## இ) பொருளை அறிந்து எழுதுவர்.

- கற்ற செய்யுளின் பொருளை மாணவர்கள் நினைவுகூர்ந்து எழுதும் ஆற்றல் பெற்றிருப்பதை ஆசிரியர் உறுதிசெய்ய வேண்டும்.

# மாதிரி அணுகுமுறைகள்

**ஈ) சரியாகப் பயன்படுத்துவர்**

- கற்ற மொழியணிகளைப் பயன்படுத்திப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- பொருத்தமான வாக்கியங்களையும் சூழல்களையும் வழங்கிச் செய்யுள் மொழியணிகளின் பயன்பாட்டினை வலியுறுத்த வேண்டும்.
- ஆசிரியரும் அவற்றைப் பயன்படுத்திப் பேசுவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.


Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

# தனிப்பாடமாகக் கற்பிப்பதன் அவசியம்

- கற்றல் தரத்தை அடைய அவகாசம் இருக்கும்
- பல்வகை உத்திகளைப் பயன்படுத்தலாம்
- ஒவ்வொரு மாணவரையும் கவனிக்கலாம்
- மாணவரின் தனித்திறனை அறியலாம்
- கற்றதை உய்த்துணர வாய்ப்பளிக்கும்
- படைப்பாற்றல் சிறக்கும்

# மதிப்பீடு

- எல்லா மாணவரும் கற்றல் தரத்தை அடைந்துள்ளதை உறுதிசெய்வதாக இருக்க வேண்டும்.

- மதிப்பீடு, தனியாள்முறையில் செய்யப்பட வேண்டும்.

- பேச்சு, எழுத்துத் திறன்களின்வழி அளவிடப்பட வேண்டும்.

# மாதிரிப் பாடம்

| | | |
|---|---|---|
| பாடம்/வகுப்பு | : | தமிழ்மொழி/ ஆண்டு 5 |
| தலைப்பு | : | உழைப்போம் உயர்வோம் |
| நேரம் | : | 60 நிமிடம் |
| கற்றல் தரம் | : | 4.8.3 |
| நோக்கம் | : | 'மெய்வருத்தம் பாரார்.... ' எனும் நீதிநெறி விளக்கத்தின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |

# கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள்

- காட்டப்படும் காட்சிகளையொட்டிக் கலந்துரையாடுதல். ஆசிரியர் நீதிநெறி விளக்கத்தையும் அதன் பொருளையும் அறிமுகம் செய்து விளக்குதல்.
- நீதிநெறி விளக்கத்தையும் அதன் பொருளையும் சரியான உச்சரிப்புடன் வாசித்தல். பொருளைத் தெளிவாகக் கூறுதல்.
- மாணவர்கள் குழுமுறையில் நீதிநெறி விளக்கத்தை இசை கூட்டிப் பாடுதல்.
- நீதிநெறி விளக்கத்தின் பொருளை நினைவுகூர்ந்து எழுதுதல்.

# கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| விரவி வரும் கூறுகள் | : | நன்னெறிப்பண்பு |
| பயிற்றுத் துணைப்பொருள் | : | காணொலிக்காட்சி<br>கணினி |
| மதிப்பீடு | : | நீதிநெறி விளக்கத்தின் பொருளை அறிந்து கூறுதல்; எழுதுதல். |
| சிந்தனை மீட்சி | : | i. கற்றல் தரத்தை அடைந்த / அடையாத மாணவர்களின் எண்ணிக்கை.<br>ii. தொடர் நடவடிக்கை |



Bahagian Pembangunan Kurikulum
Kementerian Pendidikan Malaysia

“Peneraju Pendidikan Negara”

# நன்றி,
# வணக்கம்